# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 25.03.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இஸ்லாத்தின் எதிரிகளுக்கு இஸ்லாம், குர்ஆன் கரீம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக தம்முடைய உள்ளத்திலுள்ள வெறுப்பு, பொறாமையை வெளிப்படுத்துவதற்கான உணர்வு எழுந்து கொண்டேதான் இருக்கின்றன. கடந்த சில நாட்களுக்கு முன் மீண்டும் ஒரு சம்பவம் நடந்தது. அதற்கு சில இஸ்லாமிய நாடுகளில் கடும் கண்டனம் வெளியானது; வெளியாகிக் கொண்டேயிருக்கின்றன. ஒரு தீய இயல்பைக் கொண்ட அமெரிக்க பாதிரியார் செப்டம்பர் 2010-ல் குர்ஆனைப் பற்றிய வீணான பேச்சுகளையும், அவதூறுகளையும், குர்ஆனை எரிப்பது பற்றிய பேச்சுக்களையும் பேசி வந்தார். அப்பொழுது ஏதாவதொரு கட்டாயத்தினால் அந்த கொடூரச் செயலை செய்ய முடியாமல் போனது. ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு தனது நண்பர்களுடன் இணைந்து குர்ஆன் மஜீதை எரித்ததன் மூலம் ஒரு தீய செயலைச் செய்திருக்கிறார். மேலும் தன்னுடைய இந்த தீய செயலுக்கு இவ்வாறாக நியாயம் கற்பிக்கின்றனர்.

அவர் தனது ஒரு கற்பனைக் கதையை உருவாக்குகிறார். அதற்கு 12 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்தார். அவர்கள்தான் இந்த முடிவை எடுத்தனர். அதில் முஸ்லிம்களின் பிரதிநிதியாக திருக்குர்ஆனுக்கு ஆதரவாக ஒரு பள்ளிவாசலின் இமாமையும் உறுப்பினராக அழைத்தனர். மேலும் ஆறு மணி நேரத்திற்குப் பிறகு அந்த குழு (நவூதுபில்லாஹ்) குர்ஆன் மஜீத் கடுமை மற்றும் தீவிரவாதப் போதனை வழங்குகிறது. எனவே அதை எரித்து விட வேண்டும் என்று முடிவு செய்தனர். இந்த விஷயத்தில் இவர்களே கட்சிக்காரர்கள். மேலும் இவர்களே நீதிபதிகள். சரியாக சொல்லப்போனால் இவர்களே குற்றவாளிகள்; இவர்களே நீதிபதிகள் என்றுதான் கூற வேண்டும்.

ஆக, இந்த பாதிரியாருக்கு அமெரிக்காவில் எந்த செல்வாக்கும் கிடையாது. இவரை பின்பற்றக்கூடியவர்கள் பலர் உள்ளனர் என்றோ, இவர் மீது நம்பிக்கை கொள்ளக் கூடியவர்கள் பலர் இருக்கின்றனர் என்றோ இவருக்கு எந்த சிறப்பு அம்சமும் கிடையாது. ஒருசிலர் இவருடைய சர்ச்சிற்கு வருகிறார்கள். மிக எளிதாக பிரபலம் ஆவதற்கு கொடூரமான செயலை இவர் செய்கிறார். பத்திரிகைகளும், ஊடகங்களும் தான் இதனை தலைக்குமேல் தூக்கி வைக்கிறார்கள். மேலும் அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக குழப்பத்தைப் பரப்புகின்றனர். இதில் ஊடகங்கள் தான் மிகவும் அதிகமாக செயல்படுகின்றன. இதன் மூலமாக உலகத்தின் கவனம் ஈர்க்கப்பட்டு சம்பந்தப்பட்ட பத்திரிகை, மீடியா, இணையதளங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைய வேண்டும் என்பதேயாகும். ஆனால் மீடியாக்கள் இவ்வாறு செய்வதன் மூலம் எந்தவிதமான ஈர்ப்பும் மக்களிடம் ஏற்படவில்லை என்று சர்ச்சை செய்யக் கூடியவர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் பல மக்களிடம் நேர்காணல் எடுத்தார்கள். Council on American Islamic Relation என்ற ஒரு அமைப்பு அமெரிக்காவில் உள்ளது. அதனுடைய பிரதிநிதியிடம் கேட்கப்பட்டது. அவர் இதனைப் பற்றி எந்தவிதமான கருத்தையும் கூற மறுத்து விட்டார். இவர் ஒரு தீய மனிதராவார். ஒருவேளை இந்த வேலை செய்வதனால் 15 நிமிடம் அவருக்கு மீடியாவில் பிரபல்யம் ஆகலாம்; ஆனால் நாம் ஏதாவது கூறினால் இதிலிருந்து மேலும் சில நிமிடங்களுக்கு பிரபல்யம் கிடைக்கும். அவ்வாறு கிடைப்பதை நாம் ஒருபோதும் விரும்பமாட்டோம் என அவர் கூறினார். இது அவர்களுடைய சிந்தனையாகும்.

ஆக நான் கூறியது போன்று இதுபோன்ற மோசமான கொடுமையான செயல்கள் இஸ்லாத்திற்கு எதிராக எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இதுபோன்ற செயலை எவராவது தன்னுடைய சில மக்கள் மத்தியில் கூறினாலும் அல்லது பொது இடத்தில் பேசினாலும் இதனைப் பற்றி நம்பிக்கையாளர் கேட்டால் கண்டிப்பாக அவரது உள்ளத்தில் வேதனை ஏற்படும். ஆனால் ஒரு உண்மையான

மூஃமினுக்கு இப்படி வேதனை ஏற்படும் போது சம்பந்தப்பட்ட நபரின் தலைக்கு விலை பேசுவது, உலகின் சிலர் அவருடைய தலைக்கு விலை நிர்ணயித்துள்ளனர். அல்லது ஊர்வலம் சென்று நாட்டிறகு நஷ்டத்தை ஏற்படுத்துவது, எதிரிகளுடைய எதிர்ப்பை அதிமாக்குவது போன்றவை எதிர்நடவடிக்கையாக இருக்காது.

மாறாக, உண்மையான எதிர்நடவடிக்கை தன்னுடைய சொல், செயல், நடத்தை மூலம் குர்ஆனுடைய அழகிய படத்தைக் காட்ட வேண்டும். அப்போது உலகம் தானாகவே இப்படி மோசமான செயலை செய்பவர்களை சபிக்க ஆரம்பித்து விடும். அவர்கள் குருடர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மகத்துவம் தெரியாது; தெரிந்து கொள்ளவும் முடியாது.

பல மதங்களில் நீதியுடன் நடக்கக்கூடியவர்கள் குர்ஆனையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் புகழ்ந்து இந்துக்களிலிருந்தும், சீக்கியர்களிலிருந்தும், கிறிஸ்தவர்களிலிருந்தும் எழுதியிருக்கிறார்கள். இதனை புகழாமல் இருக்கவும் முடியாது.

இங்கு நான் ஒன்றிரண்டு உதாரணங்களைக் கூறுவேன். அவைகள் தாமாகவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மாற்று மதத்தினர் பார்வையில் என்ன அந்தஸ்து உள்ளது என்பதையும், குர்ஆனுடைய போதனைகள் எவ்வளவு அழகானவை என்பதையும் தெளிவுபடுத்தும்.

இன்று பேசக்கூடிய இந்த தீயவர் மட்டும் கிடையாது. சில நாட்களுக்கு முன் அமெரிக்காவின் ஒரு பத்திரிகையில் எழுதுகிறார். இது எப்படிப்பட்ட தஜ்ஜாலுடைய செயல் என்று பாருங்கள். முஸ்லிம்கள் தீயவர்கள் கிடையாது. ஆனால் குர்ஆனின் போதனைகள் தான் இவர்களுக்கு கொடுமை, தீவிரவாதத்தை கற்றுக் கொடுக்கிறது.

இவர்கள் ஒருபோதும் குர்ஆனை படித்திருக்கவும் மாட்டார்கள். ஆனால் தன்னுடைய உள்ளத்திலுள்ள வெறுப்பையும், பொறாமையையும் வெளிப்படுத்துவதற்காக இவ்வாறு செய்கின்றனர்.

ஆக, நான் ஒரு ஆதாரத்தைக் கூறுகிறேன். History of the Intelectual of Europe by John William Draper என்ற புத்தகத்தின் புதிய பிரதியின் முதல் பாகத்தில் 332ம் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதன் மொழியாக்கத்தில் அரபு நாட்டின் முன்னேற்றம் வாளின் பலவந்தத்தால் ஏற்பட்டது என்று கூறுகிறார்கள். இது முற்றிலும் தப்பெண்ணமாகும். வாளால் சமுதாயத்தின் மதத்தை மாற்றலாம்; ஆனால் வாளால் மனிதனின் எண்ணம் மற்றும் உணர்வை மாற்ற முடியாது. மேலும் அதே புத்தகத்தில் பக்கம் 343, 344 எழுதுகிறார்.

குர்ஆனைப் படிக்கக்கூடிய நியாய உணர்வுள்ள ஒருவர் கூறப்பட வேண்டிய விஷயத்தின் நோக்கம் எவ்வளவு அழகாக விளக்கப்பட்டிருக்கிறது என்பதை பார்த்து எவ்வித சந்தேகமும் இல்லாமல் ஆச்சரியப்படுவார். குர்ஆன் உயர்ந்த நல்லொழுக்கம், போதனைகள் மற்றும் ஞானத்தால் நிரம்பியிருக்கிறது. இதனுடைய அமைப்பு தெளிவாகவும், ஒவ்வொரு வார்த்தையும் தனது பொருளை தனக்குள் அடக்கியுள்ளன. ஒவ்வொரு பக்கமும் தனக்குள் எப்படிப்பட்ட விஷயங்களை வைத்துள்ளதென்றால் மனிதன் அதனைப் புகழாமல் இருக்க முடியாது. இதுதான் மேற்கத்திய சிந்தனையாளர் ஒருவரின் எண்ணமாகும். பல மேற்கத்திய சிந்தனையாளர்கள் மத வேறுபாடுகள் இருந்தும் உண்மையை கூற வேண்டிய நிலையில் அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அவர்களது உள்ளம் நீதியுடன் நடக்க அறிவுறுத்தியது. ஆகையால் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்), மற்றும் குர்ஆனைப் புகழாமல் இருக்க முடியவில்லை.

ஆனால் வெறுப்பு மற்றும் பொறாமையில் மூழ்கியிருப்பவர்களுடைய கண்களுக்கு இவை தெரியாது. நான் ஓதிய வசனங்களில் கூட அல்லாஹ் இவர்களைப் பற்றி தான் கூறுகிறான். குர்ஆன் உண்மையானதுதான். இதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. நான் முதலில் ஓதிய வசனத்தின் பொருள்:

அவர்கள் அறிவுரையினைப் பெற வேண்டுமென்பதற்காக நாம் இந்த குர்ஆனில் ஒவ்வொரு விஷயத்தையும் திரும்பத் திரும்ப விளக்கியுள்ளோம். (அவ்வாறிருந்தும்) இது அவர்களுக்கு (தற்பெருமையையும்) வெறுப்பையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. (17:42)

குர்ஆன் இவர்களைப் பற்றி கூறி விட்டது. நிராகரித்தவர்களின் நிலை இதுதான். குர்ஆனில் பழைய வரலாற்றைக் கூறக்கூடிய வசனங்கள் முன்னறிவிப்பு செய்கின்றன. இப்படிப்பட்ட மக்கள் இஸ்லாத்தின் எதிரிகளாக பிறந்தார்கள்; பிறந்து கொண்டே செல்வார்கள். குர்ஆனில் தெளிவான போதனை இருந்தும், ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி விளக்கம் இருந்தும் பல கோணங்களில் விளக்கம் இருந்தும் கூட இதன் மீது ஆட்சேபனை செய்கின்றனர். வெறும் ஆட்சேபனையை மட்டும் செய்வது கிடையாது. மாறாக பல வழிகளில் பல விஷயங்களை எடுத்துரைப்பது இவர்களுடைய கண்களை மறைத்து விட்டது. மேலும் இந்த போதனையிலிருந்து அவர்கள் வெறுப்புடன் தூரம் விலகிச் செல்வார்கள். மேலும் நான் ஓதிய சூரா பனீஇஸ்ராயீலின் 83 வது வசனத்தில் இவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

**அதன் பொருள்: நம்பிக்கையாளருக்கு குணமளிப்பதாகவும், நம்பிக்கையாளர்களுக்கு அருளாகவும், தவறிழைப்பவர்களுக்கு நஷ்டத்தை அதிகரிக்கக் கூடியதாகவும் திருக்குர்ஆனிலிருந்து படிப்படியாக போதனைகளை இறக்கிக் கொண்டிருக்கிறோம். (17:83)**

ஆக, அவர்களின் இயல்பு எப்படியிருக்குமோ அதுபோன்று தான் அவர்களுக்கு தென்படும் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. மஞ்சள் காமாலை நோய் உள்ளவர்களுக்கு கண்கள் மஞ்சள் நிறமாக இருக்கும். ஆனால் அவருக்கு பார்ப்பதெல்லாம் மஞ்சளாகத் தெரியும். தீய இயல்புடையவருக்கு அவருடைய இயல்பிற்கு ஏற்பவே தென்படும். குர்ஆன் குதல்லில் முத்தகீன் (இறையச்சம் உடையவர்களுக்கு நேர்வழிகாட்டக் கூடியது) என்று ஆரம்ப வசனத்திலேயே கூறப்பட்டதை அறிவித்து விட்டது. குர்ஆனின் அழகிய போதனையானது பழைய வேதங்களில் உயர்ந்த போதனையாக இருக்கின்றன. இவை அனைத்தும் எவருடைய உள்ளத்தில் சிறிதளவாவது இறையச்சம் இருக்குமோ அவருக்குதான் தென்படும். எவருடைய உள்ளத்தில் சிறிதளவாவது இறையச்சம் இருக்குமோ அவருக்கு தான் நேர்வழி கிடைக்கும்.

ஆக, இந்த மக்கள், தான் விரும்பும் அளவுக்கு கெடுதல் செய்யட்டும். இதன் மூலமாக (நவூதுபில்லாஹ்) இவர்கள் குர்ஆனுடைய போதனைகளுக்கு ஏதாவது கேடு விளைவிப்பார்கள் என்பதைப் பற்றி நமக்கு கவலை இல்லை. குர்ஆனுடைய உயர்ந்த அந்தஸ்து மற்றும் பாதுகாப்பிற்கு இறைவன் தானே பொறுப்பாளனாவன். நான் ஓதிய இந்த இரண்டாவது வசனத்தில் மூஃமின்களுக்கு நற்செய்தி உள்ளது. குர்ஆன் உங்களுக்கு அருளாக இருக்கின்றது. ஒவ்வொரு நொடியும் அருளுக்கான ஏற்பாட்டை செய்து கொண்டே இருக்கிறது. உங்களுடைய ஆன்மீக நோயிற்கும் மருந்து உண்டு; பௌதீக நோயிற்கும் மருந்து உண்டு. எல்லா விதமான போதனைகளையும் தனக்குள் வைத்திருக்கின்றது. இதற்கு முன்னுள்ள வசனத்துடன் இதனை சேர்த்தால் உண்மையான மூஃமின்களுக்கு நற்செய்தி இருக்கிறது. உண்மை வந்து விட்டது. பொய் ஓடி விட்டது. இன்னல் பாத்தில கான ஸகூக்கா. பொய், ஏமாற்றுதல், திட்டம் தீட்டுதல் மேலும் பொய் ஓட வேண்டியதுதான். இது நியதி ஆகும்.

ஆக, இங்கு இதன் பக்கம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தலைக்கு விலை நிர்ணயிப்பதாலும், பொருள்களை சேதப்படுத்துவதாலும், தவறான வழியில் கிளர்ச்சி செய்வதாலும் குர்ஆனின் கண்ணியம் பாதுகாக்கப்படமாட்டாது. மாறாக உண்மையான நம்பிக்கையுடையவர் குர்ஆனின் போதனைகளின்படி செயல்பட்டால் தான் குர்ஆனின் மேன்மையைக் காப்பாற்றக் கூடியதாக ஆக முடியும்; காப்பாற்றவும் முடியும்.

இதன் அழகிய போதனைகளை உலகத்திற்கு வெளிப்படுத்தி உண்மை மற்றும் பொய் ஆகியவற்றிற்கு மத்தியில் உள்ள வேறுபாட்டை தெளிவுபடுத்துங்கள். இந்த போதனைகள் உலகில் வெளிப்பட்டால் அல்லாஹ்வுடைய நியதி மூஃமின்களுக்கு அருளாகவும் காயப்பட்ட மனதிற்கு மருத்துவம் செய்யப்படும் காட்சியை வெளிப்படுத்தும். திருக்குர்ஆனின் வெற்றி மூஃமின்களின் வெற்றியாகும். உலகிற்கு இதனைத் தவிர வேறு வழியில்லை. அது திருக்குர்ஆனின் போதனையின் மூலம் தனது ஆன்மீக மற்றும் பௌதீக முன்னேற்றத்திற்கான வழிகளைத் தயார் செய்ய வேண்டும். இதனை தன் மீது கடமையாக்கிக் கொள்ள வேண்டும். முக்கியமாக அஹ்மதிகளுக்கு இவர்களுடைய அசிங்கமான செயல்பாடுகளினால் எந்த கவலையும் இல்லை. நாம் இந்த காலத்தில் குர்ஆனின் போதனைகளை மீண்டும் உலகில் பரப்புவதற்காக அனுப்பப்பட்ட

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட மக்களாவோம். இதனைப் பற்றி திருக்குர்ஆன் சூரா ஜுமுஆவில் வருகிறது.

வானங்களிலும் பூமியில் உள்ளவையெல்லாம் அரசனும் தூயவனும் வல்லமையுள்ளவனும் நுண்ணறிவுள்ளவனமாகிய அல்லாஹ்வின் தூய்மை எடுத்துரைக்கின்றன.

அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்த போதிலும், அவனது கட்டளைகளை படித்துக் காட்டி அவர்களைத் தூய்மைப்படுத்தி அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.

மேலும் அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் அவரை எழுப்புவான். அவன் வல்லமை மிக்கவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான்.

ஆக, முதல் காலகட்டத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அனுப்பினான். அவர்கள் மீது இறங்கிய போதனைகளின் மூலம் சீர்கெட்டுக்கிடந்த உலகத்தில் ஒரு புரட்சியை அன்னார் ஏற்படுத்தினார்கள். அம்மக்கள் அறிவீனர்களாக இருந்தனர். சின்னச்சின்ன சண்டைகளிலும் கூட இரத்த வெறியனாக மாறக்கூடியவர்களாக இருந்தனர். அவர்கள் மீது இந்த அழகிய வசனத்தை ஓதினார்கள். இந்த அழகிய போதனைகளின் மூலம் தூய்மையாக்கினார்கள். அறிவீனர்களை ஞானம் நிறைந்தவர்களாக மாற்றினார்கள். அவர்களை இந்த அழகிய இறை வேதமாகிய கியாமத் வரை அறிவு மற்றும் ஞானம் பற்றிய விஷயங்களை உள்ளடக்கிய வேத நூல் மூலம் ஒளிபெறச் செய்தார்கள். இதனால் விலங்குகளைப் போல் திரிந்தவர்களை மனிதர்களாக மாறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவர்கள் மனிதர்களாக மாறினார்கள். மனிதனிலிருந்து அறிவு பெற்ற மனிதனாக மாறினார்கள். பிறகு அறிவுபெற்ற மனிதனிலிருந்து இறைநெருக்கம் பெற்ற மனிதராக மாறினார்கள். இன்றைய காலகட்டத்தில் அல்லாஹ் மீண்டும் நம்மீது கருணை காட்டியுள்ளான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை, வசனங்களை படித்துக் காட்டுபவராகவும், இறை அடையாளங்களின் மூலம் ஆன்மீகத்தில் முன்னேறச் செய்யவும் ஈமான் மற்றும் நம்பிக்கையில் முன்னேறிச் செல்லவும், நமது வாழ்வுக்கு வழிகாட்டியவாறு தூய்மை செய்யவும், நமக்கு இந்த வேதத்தின் உண்மைத்தன்மையையும் முக்கியத்துவத்தையும் புரிய வைக்கவும் அனுப்பியிருக்கிறான். ஷிஃபாவுன் ரஹ்மத்துல் லில் மூஃமினீன், மூஃமின்களுக்கு ஷிஃபா, மூஃமின்களுக்கு ரஹ்மத் ஆகும். இந்த மிகப்பெரிய வேதம் எவ்வாறு ஷிஃபா ஆகும்.

இறுதி வேதத்தின் போதனைகளில் மறைந்து கிடக்கின்ற ஞானம் நிறைந்த முத்துக்களைப் பற்றி நமக்கு தெரியப்படுத்தி இருக்கிறார்கள். இது அல்லாஹ் மூஃமின்களின் மீது செய்த மாபெரும் கருணையாகும். இன்று மாநபி (ஸல்) அவர்களின் அடிமைகளையும், அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று நடக்கக் கூடியவர்களையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை நிறைவேற்றக்கூடியவர்களையும் பார்த்து இவ்வாறு கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இன்றைய காலத்தில் குர்ஆனின் மகத்துவத்தை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்கள் என்றால், ஓரிடத்தில் தவ்ராத்துடன் ஒப்பிட்டுக் கூறுகையில், பாதிரிகளின் இந்த வாதம் முற்றிலும் தவறாகும். குர்ஆன் தவ்ஹீது மற்றும் போதனைகளில் தவ்ராத்தில் இல்லாத என்ன புதிய விஷயத்தைக் கொண்டு வந்தது. அறிவீனர்கள் தவ்ராத்தைப் படித்து ஏமாந்து போவார்கள். தவ்ராத்தில் தவ்ஹீதும் உள்ளது. இபாதத் பற்றிய போதனைகளும் உள்ளது. படைப்பினங்களுக்குரிய உரிமைகளைப் பற்றியும் உள்ளது. பிறகு குர்ஆன் என்ன புதிய விஷயத்தை கொண்டு வந்துள்ளது. இறைவனுடைய வசனங்களைப் பற்றி சிந்தனை செய்யாதவன்தான் இதில் ஏமாற்றம் அடைவான்.

இறை ஞானங்களில் பல பிரிவுகள் உள்ளன. இதனைப் பற்றி தவ்ராத்தில் எங்கும் கூறப்படவில்லை. தவ்ராத் தவ்ஹீதுடைய நுண்ணறிவு பற்றி எங்கும் அடையாளம் கூட காண முடியாது. குர்ஆன் நமக்கு

தெளிவுபடுத்துகிறது. தவ்ஹீது என்பது சிலைகள், மனிதர்கள், விலங்குகள், வானில் உள்ள கோள்கள், ஷய்த்தான்கள் போன்றவற்றை வழிபடுவதிலிருந்து தவிர்ந்து கொள்வது மட்டும் கிடையாது. மாறாக ஏகத்துவம் மூன்று படித்தரங்களைக் கொண்டதாகும்.

**முதலாவது படித்தரம்:** இறை கோபத்திலிருந்து தப்பிக்க விரும்பும் மனிதர்கள்.

**இரண்டாவது படித்தரம்:** குறிப்பாக சாதாரண மனிதர்களை விட நெருக்கத்தைப் பெற விரும்பும் மக்கள்.

**மூன்றாவது படித்தரம்:** மிகவும் குறிப்பிட்ட மக்கள் அதாவது நெருக்கத்தின் எல்லையை அடைய விரும்புபவர்கள்.

இறைவனைத் தவிர மற்றவைகளை வணங்கக் கூடாது என்பது தான் தவ்ஹீதின் முதல் நிலை. ஒவ்வொரு குறிப்பிட்ட படைப்பினங்கள் அது வானத்தில் இருந்தாலும் சரி, பூமியில் இருந்தாலும் சரி அதனை வணங்கக் கூடாது.

இரண்டாவது நிலை தன்னுடைய மற்றும் பிறருடைய செயல்களில் உண்மையான விளைவுகளை ஏற்படுத்துவது அல்லாஹ் தான் என நம்புவது, காரணிகள் மீது முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. அதனால் இறைவனுக்கு இணையாகி விடக் கூடாது.

உதாரணமாக, ஒருவேளை ஸைய்யத் இல்லையென்றால் எனக்கு இந்த இழப்பு வந்திருக்கும். ஒருவேளை பக்கர் இல்லாவிட்டால் நான் அழிந்து போயிருப்பேன் போன்ற வார்த்தைகளினால் ஸையத் மற்றும் பக்கரை ஒரு பொருட்டாக கருதினால் அது ஷிர்க் ஆகும். தவ்ஹீதுடைய நிலை அல்லாஹ்வின் அன்பில் தன்னுடைய நஃப்ஸின் நோக்கங்களை இடையிலிருந்து எடுப்பதாகும். தன்னை அவனுடைய மகத்துவத்தில் மூழ்கடிப்பது. இது தவ்ஹீதின் மூன்றாவது நிலையாகும். இதுபோன்று தவ்ஹீது பற்றி தவ்ராத்தில் எங்கிருக்கிறது?

இதேபோன்று சொர்க்கம், நரகம் பற்றி தவ்ராத்தில் எங்கும் கூறப்படவில்லை. ஒருவேளை எங்கேயாவது ஜாடையாகக் கூறப்பட்டிருக்கலாம். இதேபோன்று இறைவனுடைய முழு பண்புகளைப் பற்றி எங்கும் முழுமையாகக் கூறப்படவில்லை.

ஒருவேளை தவ்ராத்தில் குர்ஆனைப் போன்று **குல்ஹுவல்லாஹு அஹத். அல்லாஹுஸ்ஸமத். லம் யலித். வலம் யுவ்லத். வலம் யகுல்லஹு குஃபுவன் அஹத் (நீர் கூறுவீராக: அல்லாஹ் ஒருவனே ஆவான். அல்லாஹ் தேவை அற்றவன். அவன் எவரையும் பெறவில்லை; அவன் எவராலும் பெறப்படவுமில்லை. அவனுக்கு இணை எவரும் இல்லை)** என்ற வழிகாட்டுதல்கள் இருந்தால் கிறித்தவர்கள் படைப்பினங்களை வணங்குவதிலிருந்து தப்பித்திருப்பார்கள். இதேபோன்று தவ்ராத்தில் உரிமைகள் கொடுப்பது பற்றி முழுமையாக கூறப்படவில்லை. ஆனால் திருக்குர்ஆன் இதனை மிக அழகாக கூறியிருக்கிறது.

உதாரணமாக, இன்னல்லாஹ யஃமுருபில் அத்வி வல் இஹ்ஸானி வஈத்தாயிதில் குர்பா – நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு கொடுப்பதைப் போன்று கொடுக்கவும் கட்டளையிடுகிறான்.

அதாவது மக்களிடம் அனுதாபம் காட்டுவது இயல்பாக இருக்க வேண்டும். கருணை காட்டுகிறேன் என்ற எண்ணத்தில் இருக்கக் கூடாது. தாய் தன்னுடைய குழந்தைகளுடன் வைத்திருக்கும் அன்பு போன்று இருக்க வேண்டும்.

இதைப்போன்று தவ்ராத்தில் இறை இருப்பு, அவனது ஏகத்துவம் மற்றும் முழு பண்புகளைப் பற்றி அறிவுப்பூர்வமாக நிரூபித்துக் காட்டவில்லை. ஆனால் குர்ஆன் இந்த அனைத்து நம்பிக்கைகளையும், இல்ஹாமுடைய தேவையையும், நுபுவ்வத்தை அறிவுப் பூர்வமாக நிரூபித்துக் காட்டியிருக்கிறது. ஒவ்வொரு விஷயத்தையும் தத்துவத்தின் அடைப்படையில் எடுத்துரைத்து உண்மையைத் தேடுபவர்கள் எளிதில் புரிவதற்கு

வழிவகுத்துள்ளது. இந்த அனைத்து ஆதாரங்களும் திருக்குர்ஆனில் எல்லாருடைய சக்திகளுக்கு அப்பாற்றட்ட முறையில் கூறப்பட்டுள்ளன.

உதாரணமாக, இறை இருப்பைப் பற்றி குர்ஆனில் இல்லாத ஒரு ஆதாரத்தை எடுத்துக் காட்டி யாராலும் நிரூபிக்க முடியாது. இதனைத் தவிர இன்னொரு மிகப்பெரிய மகத்துவம் என்னவென்றால், இதற்கு முன்னுள்ள அனைத்து வேதங்களும் மூஸாவுடைய வேதம், தவ்ராத்திலிருந்து இஞ்சீல் வரை ஒரு குறிப்பிட்ட சமுதாயங்களுக்காக அதாவது பனீ இஸ்ராயீல் மக்களுக்காக வந்தது என்றும், இதன் போதனை அனைவருக்கும் அல்ல என்றும், பனீ இஸ்ராயீல் சமுதாயத்திற்கு மட்டும் தான் என்று கூறுகிறது. ஆனால் திருக்குர்ஆன் முழு உலக மக்களையும் சீர்திருத்துவதுதான் இதன் நோக்கமாகும். இதற்கு எந்த குறிப்பிட்ட சமுதாயமும் கிடையாது. மாறாக மிக வெளிப்படையாக கூறுகிறது. எல்லா மனிதர்களுக்காகவும் திருக்குர்ஆன் வந்தது என்றும், ஒவ்வொருவருடைய சீர்திருத்தமும் இதன் நோக்கமாகும் என்பதை மிக பகிரங்கமாக கூறுகிறது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் மேன்மைக்காக தந்த பொக்கிஷத்துடைய ஒரு பார்வையாகும். நாம் அஹ்மதிகள் பாக்கியசாலிகள் ஆவோம். நாம் திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கேற்ப நமது வாழ்க்கையை அமைக்கும் போதுதான் நாம் பாக்கியசாலிகள் ஆவோம். உலகத்திற்கு காண்பியுங்கள். இதுதான் நீங்கள் ஆட்சேபனை செய்த ஒளிமிக்க போதனையாகும். அப்போதுதான் நாம் பின்னவர்களுடன் சேரக்கூடிய மக்களாவோம்.

நான் குத்பாவில் ஜெர்மனியை உதாரணமாக கூறினேன். அங்கு பல இடங்களில் குர்ஆனின் கண்காட்சிக்கான ஏற்பாடு உள்ளது. சில இடங்களில் சர்ச்சின் அரங்குகள் கண்காட்சிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நல்ல விளைவு ஏற்பட்டுள்ளது. மீடியாவும் இதனைப் பற்றி கூறியிருக்கிறது.

நான் இதனைக் கூறுவதற்கான காரணம் மற்ற நாடுகளும், இதுபோன்ற கண்காட்சிகளை ஏற்படுத்துங்கள். ஆனால் இதில் நல்ல முறையில் வேலை நடைபெறவில்லை. அமெரிக்காவில் சரியான முறையில் திட்டமிடப்பட்டு கண்காட்சியை ஏற்படுத்தினால், இன்றைய நாளில் மீடியாக்களுடைய கவனம் இஸ்லாத்தின் பக்கம் இருக்கிறது. ஒரு பக்கம் இந்த கொடுமைக்காரனின் செயல்பாடுகளை எடுத்துக் கூறுகிறது என்றால், நமது விஷயங்களையும் இது வெளிப்படுத்தும். அமெரிக்காவின் ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் அமைதியைப் பரப்ப ஜமாஅத்தின் தூதுச் செய்தியை பரப்ப பிரசுர விநியோகம் மற்றும் செமினார் போன்றவற்றை மிகப் பெரிய அளவில் செய்திருக்கிறார்கள். இதனால் ஊடகங்களில் நல்ல கவரேஜ் கிடைத்திருக்கிறது. ஆனால் கண்காட்சி போன்றவை எந்த அளவு இருக்க வேண்டுமோ அந்த அளவு இல்லை.

மூஃமின்களுடைய வேலை ஒவ்வொரு திசையிலும் கவனம் செலுத்த வேண்டும். அமெரிக்காவிலும் சரி, மற்ற நாடுகளிலும் சரி சரியான முறையில் திட்டம் தீட்டி கண்காட்சிகள் போன்றவற்றை நடத்த வேண்டும். இதற்காக அரங்குகள் போன்றவற்றை வாடகைக்கு எடுக்கலாம். சில சமயங்களில் பள்ளிவாசல்களில் கண்காட்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன. இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணங்கள் எந்த அளவு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதென்றால் உலகில் தேவையில்லாமல் ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் சில மக்கள் இதில் கலந்து கொள்ளமாட்டார்கள். ஆகையால் இதற்காக வாடகைக்கு அரங்குகள் எடுத்து திருக்குர்ஆன் கண்காட்சியை நடத்த வேண்டும். இதில் குர்ஆனின் மொழியாக்கங்களை வைக்க வேண்டும். இதன் அழகிய போதனைகளை சுவரொட்டி, பேனர்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும். மிக அழகான தோற்றம் இருந்தால் அது மக்களின் கவனத்தை ஈர்க்கும். மீடியாவுடைய கவனம் இதன் பக்கம் இருக்கும்.

இன்றைய காலத்தில் இஸ்லாத்தின் பக்கம் இவைகள்தான் கவனம் செலுத்துகின்றன. சில நல்ல விஷயங்களையும் எழுதுகிறார்கள். ஜமாஅத்தை பற்றி வரக்கூடிய விஷயங்களை அதிக அளவு சரியாகவே எழுதுகிறார்கள். அவர்களுடைய எண்ணங்களை இறைவன் மட்டும் அறிவான். ஆனால் நாம் இதிலிருந்து பலன்பெற வேண்டும்.

பொதுவாக புத்தக கண்காட்சியில் கடைகள் மூலம் நாம் பங்குபெறுவதுண்டு. ஆனால் இதன் கவரேஜை மீடியாக்கள் செய்வதில்லை. ஏனென்றால் அங்கு பலர் பெரிய பெரிய கடைகளை போட்டிருப்பர். சில முக்கியமான கடைகளும் அதில் அடங்கும். ஆகையால் தனியாக கண்காட்சியை ஏற்படுத்தினால் கண்டிப்பாக

அதற்கு விளைவு ஏற்படும். அழகான முறையில் தனியாக ஏற்பாடு செய்யப்பட்டால் உலகத்திற்கு குர்ஆன் என்றால் என்ன என்பது தெரியும். இதன் போதனைகள் என்ன என்பது தெரிய வரும். ஜிஹாது அல்லது கொலை செய்தல் போன்றவற்றிற்கு எதிராக பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ஆனால் எந்த நிலையில் இதற்கு அனுமதி இருக்கிறது என்பது அவர்களுக்கு தெரியாது.

அல்லாஹ் வாளை எடுப்பதற்கு அனுமதி கொடுத்த நேரத்தில் அங்கு கிறிஸ்தவர்களையும் யூதர்களையும் மற்ற மதங்களையும் பாதுகாப்பது பற்றியும் கவனமூட்டியுள்ளான். முஸ்லிம்களை மட்டும் பாதுகாப்பது பற்றி கூறவில்லை.

இது தஜ்ஜாலுடைய ஏமாற்று வேலையாகும். பல இடங்களிலிருந்து காலத்திற்கேற்ப வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். அதனை முழுமையாக உடைக்க வேண்டியுள்ளது. முழுமையாக உடைப்பதற்கு தொடர் முயற்சி தேவை. அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும் தான் இதனை முழுமையாக செய்ய முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கூற்றை மேலே குறிப்பிட்டேன். அதிலிருந்து இஸ்லாமிய போதனைகளுக்கு எவ்வளவு அவசியம் இருக்கிறது. மேலும் எவ்வாறு ஒப்புமை செய்து காண்பித்திருக்கிறார்கள். மேலும் இஸ்லாம் எந்த அளவு நீதியைப் பற்றி கூறியுள்ளதோ அதுபோன்று இதுவரை வேறெந்த வேதமும் கூறவில்லை என்று அதில் கூறப்பட்டிருந்தது.

**இறைவன் கூறுகின்றான்:**

**உங்கள் மார்க்கம் தொடர்பாக உங்களுடன் போர் செய்யாதவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)**

**நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை, உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (59:9)**

**நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். மேலும் பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் உறவினர்கள், அனாதைகள், ஏழைகள், உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்கள், அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்கள், உங்களுடன் இருப்பவர்கள், வழிப்போக்கர்கள், உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் ஆகியவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். கருவங் கொண்டோரையும் பெருமையடிப்பவரையும் அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை. (4:37)**

இங்கு முதலில் கூறப்பட்ட வசனத்தில் உங்களிடம் பகைமை கொள்ளாதவர்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. அடுத்து, சூரா மாயிதாவின் வசனத்தில் எதிரிகளிடம் நீதி, நேர்மையுடன் நடப்பதற்கு கட்டளையிடப்பட்டுள்ளது. பகைமைக்கு குறிப்பிட்ட எல்லைகள் உள்ளன. எதிரி தீய மற்றும் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்தால் நீங்கள் அநீதியை பின்பற்றாமல் அளவுக்கு மீறி பகைமையை வெளிப்படுத்தக் கூடாது. பாவத்தை விட அதிக தண்டனை கொடுக்காதே. எதிரி வெளிப்படுத்தும் தீய ஒழுக்கங்களைப் போன்று நீங்களும் வெளிப்படுத்தாதீர்கள்.

மூன்றாவது வசனம் சூரா நிஸாவுடைய வசனங்கள் ஆகும். பெற்றோரிலிருந்து ஒவ்வொருவரிடமும் கருணை காட்ட வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளது. முழு மனித சமுதாயத்திடமும் கருணை காட்ட வேண்டும். இதன் மூலமாக உலகில் அமைதி ஏற்படும். அமைதியை ஏற்படுத்துவதற்கு ஒரு அமைதியான சூழலுக்கு இந்த உயர்வான போதனையைத் தான் குர்ஆன் நமக்கு தந்துள்ளது. இதுதான் இன்று அமைதிக்கு சாட்சியாகும். மாறாக, குர்ஆனை இழிவுபடுத்தி எரித்த அந்த கொடுமைக்கார அமெரிக்க பாதிரியார் செய்த செயல் கிடையாது. நிச்சயமாக இவர்கள் இறைவனுடைய தண்டனையைப் பெறக்கூடியவர்கள ஆவர்.

இஸ்லாம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் குர்ஆன் மீது பகைவர்கள் மோசமான தாக்குதல் நடத்தும் போது நமது வேலை முதலில் நாம் நம்முடைய செயல்களை உண்மையான இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். பிறகு சமுதாயத்தில் இந்த அழகிய போதனையை பரப்ப வேண்டும். அதற்கு தேவையான அனைத்து வழிகளை உபயோகப்படுத்துங்கள். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பினை தந்தருள்வானாக.

நான் தற்போது ஜமாஅத்தின் ஒரு பெரியவர் மற்றும் ஒரு ஆலிம் பற்றி கூற விரும்புகின்றேன். அவர் திருக்குர்ஆனை மனனம் செய்தவர். இவருக்கு திருக்குர்ஆனுடன் ஒரு நல்ல தொடர்பு இருந்தது. உலக படிப்பில் Ph.D. முடித்திருந்தார். Astronomy – வானவியலில் ஒரு நல்ல பெயர் எடுத்திருந்தார். ஆனால் அறிவியல் எப்பொழுதும் திருக்குர்ஆனைப் பின்பற்றியே அறிந்தார். கடந்த நாட்களில் அவர் மரணமடைந்து விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அவரது பெயர் ஹாபிஸ் சாலிஹ் முஹம்மது அலாதீன் ஆகும். கடந்த நான்கு வருடமாக காதியானின் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவராக இருந்தார். தலைவர் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவை தவிர பல வருடங்களாக அதன் உறுப்பினராக இருந்தார். உஸ்மானிய்யா பல்கலைக்கழகத்திலிருந்து இயற்பியலில் எம்.எஸ்.ஸி பட்டம் பெற்றார். பிறகு அமெரிக்காவில் பி.எச்.டி. பட்டம பெற்றார். 1963-ல் Astronomy அமெரிக்காவிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் Ph.D பட்டம் பெற்றார்.

பல சிறப்பு அம்சங்களைக் கொண்ட மனிதராக இருந்தார். அறிவு ரீதியில் ஐம்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் உலகளவில் பத்திரிகையில் வெளியாகியுள்ளன. இதில் இவர்களுக்கு பல பதக்கங்களும் கிடைத்தன. இந்தியாவின் பிரபலமான பதக்கம் மகதை சாஹா பதக்கம் 1987 -ல் கொடுக்கப்பட்டது. நான் இவரது வரலாற்றை பார்த்தேன். பல பதக்கங்களைப் பெற்றிருந்தார். தன்னடக்கம் உடைய மனிதராவார். அதன் எல்லையை அடைந்திருந்தார். டைனமிக்ஸ் ஆப் கேலக்ஸிஸ், சூரிய சந்திர கிரகணங்கள் அவர்களுக்கு விருப்பமான கட்டுரையாக இருந்தது. குர்ஆன், ஹதீஸிலிருந்து, சந்திர, சூரிய கிரகணம், இமாம் மஹ்தியின் அடையாளமாக கூறப்பட்டுள்ளது. ஆகையால் இதைப் பற்றி காதியான் மற்றும் யு.கே. ஜல்ஸாக்களில் உரை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

1994, 1995 -ல் இந்த அடையாளத்தின் நூற்றாண்டு விழாவில் பல ஜமாஅத் பத்திரிகைகளில் இவர்களது கட்டுரை வெளிவந்தது. 2009 ஜல்ஸாவில் விண்ணியலின் ஒளியில் இறை இருப்பு என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அது மிகவும் அறிவிப்பூர்வமான உரையாகும். அது மிகவும் சிறந்த உரையாக இருந்தது. தனது விஞ்ஞான கட்டுரையை எப்பொழுதும் குர்ஆனின் வசனங்களை வைத்து நிரூபிக்கக் கூடியவராக இருந்தார். இதில் இவர் தேர்ச்சி பெற்றவராய் இருந்தார். மேலும் பௌதீக ரீதியாகவும் இதில் இவருக்கு விருப்பம் இருந்தது. பல பல்லைக்கழகங்களில் Research Scholar மற்றும் Research Fellow ஆக இருந்தார். இவருடைய சாதனைப் பட்டியில் நீண்டு கொண்டே செல்கிறது. பிறகு, The great man of twenty first century என்ற பதக்கத்தை 2003 -ல் அமெரிக்கா கொடுத்தது. மார்க்கத்திலும் பல நல்ல கட்டுரைகளை எழுதியிருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கு சான்றாக சூரிய சந்திர கிரகணம் என்ற கட்டுரை எழுதினார்கள். அடையாளம், சூரிய கிரகணம், சந்திர கிரகணம், நமது இறைவன், டைனமிக்ஸ் ஆஃப் தி சோலார் சிஸ்டம் போன்ற பல புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள்.

பல வருடங்களாக ஜமாஅத்தில் பல பொறுப்புகளில் இருந்து வந்துள்ளார்கள். மாநில அமீராகவும் செயலாளராகவும், ஜமாஅத் தலைவராகவும் இருந்திருக்கிறார்கள். சதர் அஞ்சுமனுடைய உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்கள். ஓய்வு பெற்ற பின் சில வருடங்களுக்கு முன் காதியான் வந்தார்கள். சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவாக நான் அவர்களை நியமித்தேன்.

அவரது இறை தொடர்பும் அல்லாஹ்வுடன் நன்றாகவே இருந்தது. இவருடைய மனைவி கூறினார்கள். ஒருமுறை பாகிஸ்தானின் கராச்சிக்கு வந்தார்கள். ஏர்ப்போர்ட்டில் கஸ்டம்ஸை சந்தித்தார்கள். சில மின்சாரா பொருள்களை எடுத்துச் செல்வதை தடுத்து விட்டார்கள். மிகவும் ஒரு கஷ்டமான சூழலாக அது இருந்தது. அனுமதிக்கப்பட்டதாகவே இருந்தது. அனுமதிக்கப்படாதவற்றை ஒருபோதும் செய்யவே மாட்டார்கள்.

அங்குள்ள கஸ்டம்ஸைச் சார்ந்தவர்கள் பயணிகளிடம் இதுபோன்ற மின்சாதனப் பொருட்களை தடுத்து வைப்பது பழக்கமாக இருந்தது. சிறிது நேரத்தில் ஸாலிஹ் சாஹிப் எங்கே சென்று விட்டார்கள். பிறகு சிறிது நேரம் கழித்து வந்தார்கள். உடனே அவர்களின் மனைவி, எங்கே சென்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான் நஃபில் தொழுவதற்காக சென்றிருந்தேன். இப்போது நமது பொருள் நமக்கு கிடைத்து விடும் என்று கூறியவாறு நிம்மதியுடன் சென்று கஸ்டம்ஸைச் சேர்ந்தவர்களிடம் கேட்டார்கள். அதற்குள் சோதனை செய்யப்பட்டு விட்டு. பிறகு அவர்கள் மன்னிப்புக் கேட்டவாறு அவர்களுடைய பொருள்களை அவர்களிடம் கொடுத்தனர். இவ்வாறான சூழ்நிலையில் வேறெவராக இருந்தால் கஸ்டம்ஸின் பின்னாலேயே சென்றிருப்பார். அல்லது கஷ்டத்தில் மூழ்கியிருப்பர்.

இவர்களது மனைவியின் சகோதரி டாக்டர் நுஸ்ரத் ஜஹான் கூறுகிறார்கள். டாக்டர் அப்துல் மாலிக் கான் சாஹிபுடைய மருமகளாக இருந்தார்கள். நான் காதியான் சென்றிருந்த சமயத்தில் இவர்கள் நோயினால் பள்ளிவாசலுக்கு செல்ல முடியாமல் தவித்தார்கள். இதன் கஷ்டத்தை அடிக்கடி என்னிடம் கூறுவார்கள். என்னால் பள்ளிவாசலுக்கு போக முடியவில்லை. நீங்களெல்லாம் பள்ளிவாசலுக்கு சென்று தொழுகின்றீர்கள்.

அவர்கள் என்னிடம் கூறினார்கள். மேலும் பலரும் இந்த சம்பவத்தைப் பற்றி என்னிடம் கூறினீர்கள். எனக்கு 26 வயது இருக்கும். நான் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி வீட்டிற்குள் நுழைந்தவுடன் அவர்கள் கூறினார்கள். இன்று அல்லது இப்பொழுது நான் கனவில் ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிப் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை கண்டேன். அவர்கள் வருகிறார்கள். அவர்கள் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள். பிறகு உங்களை அவர்கள் நாற்காலியில் உட்கார வைக்கிறார்கள். இதனை என்னிடம் கூறியவுடன், நான் கூறினேன். கலீஃபத்துல் மஸீஹ் உடைய அந்தஸ்து எங்கே? நான் எங்கே? ஏதோ சாதாரணமாக மனதில் தோன்றியிருக்கும் என்று நினைத்தேன்.

ஆனால் அவர்கள் காதியான் வந்த பிறகு சிறிது காலத்திற்கு அதாவது சாஹிப் சாதா மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிப் மரணத்திற்குப் பிறகு இவர்களை நான் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவாக நியமித்திருந்தேன். அவர்கள் கூறுகிறார்கள். அப்போது ஒரு சமயத்தில் நான் அஹ்மதிய்யத்தின் வரலாற்றை படிக்கும் போது முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்கள்தான் சதர் அஞ்சுமண் அஹ்மதிய்யவின் முதல் சதர் என்பது தெரிய வந்தது. இதன் மூலம் இர்பானி சாஹிபுடைய மிக பழைய கனவு நிறைவேறியது.

பள்ளிக்கூடத்தின் ஒரு தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் நேரமாக இருந்தது. இவர்களுக்கு குர்ஆனுடன் நல்ல தொடர்பு இருந்தது. விடாமுயற்சியுடன் குர்ஆனை மனனம் செய்தார்கள். காலையில் தேர்வு இருந்தது. தாயார் தேர்வுக்கு தயாராகுமாறு கூறினார்கள். ஆனால் நானோ குர்ஆனைப் படித்துக் கொண்டிருந்தேன். அதையே மனனம் செய்து கொண்டிருந்தார்கள். சுயமாகவே குர்ஆனை மனனம் செய்தார்கள். குர்ஆனை எடுத்துக் கொண்டு வீட்டின் தாழ்தளத்தில் சென்று மனனம் செய்து வந்தார்கள். தாயார் இவருடைய ஆர்வத்தைப் பார்த்து குர்ஆன் மனனம் செய்வதற்கு ஒரு முஅல்லிமை ஏற்படுத்தினார்கள்.

கிலாஃபத்துடன் முழுமையாக கட்டுப்பட்டதுடன் மிகவும் உளப்பூர்வமான உணர்வு இருந்தது. காதியான் தர்வேஸ்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கஷ்டத்திலும் நஃபில் மற்றும் துஆவில் மூழ்கி விடுவார்கள். தொடர்ந்து தஹஜ்ஜுத் தொழக் கூடியவர் ஆவார். குர்ஆனின் வசனங்களை ஓதிக் கொண்டிருக்கக் கூடியவர். ஜல்ஸாவின் சமயத்தில் அக்ஸா பள்ளிவாசலில் தஹஜ்ஜுத் தொழுகைக்கு இமாமத் செய்து வந்திருக்கிறார்கள். எப்பொழுதும் மார்க்கக் கூட்டங்களில் உட்காருவதையே விரும்புவார்கள். உலகத்துடன் எந்தவிதமான குறிப்பான தொடர்பும் கிடையாது.

முரப்பி சாஹிப் எனக்கு எழுதியுள்ளார்கள். ஒரு பழைய சம்பவம். தனது உறவினருடைய திருமணத்தில் பங்கு பெறுவதற்காக சென்றிருந்தார்கள். அவர்கள் அங்கு சென்றதும் நிக்காஹ்வுடைய அறிவிப்பு நேரம் வந்ததும் உலக செல்வாக்கு மற்றும் பெரியவர் என்ற மரியாதையில் இவரை நிக்காஹ் நடத்தக்

கூறினார்கள். அப்பொழுது அவர்கள் மிகக் கடுமையாக கோபமடைந்தார்கள். வக்ஃபே ஸிந்தகிக்கு கண்ணியம் அளிக்க மாட்டீர்களா? முரப்பிகளுக்கு கண்ணியம் கொடுக்கமாட்டீர்களா? இங்கு முரப்பி இருக்கும் போது நான் எவ்வாறு நிக்காஹ் நடத்துவேன். இவ்வாறு நடந்து கொண்டால் நான் உங்களது திருமணத்தில் கலந்து கொள்ளமாட்டேன் என்று கூறினார்கள்.

**முரப்பி சாஹிப் எழுதுகிறார்கள்:**

2008 –ல் கிலாஃபத் நூற்றாண்டையொட்டி நடந்த ஜல்ஸாவில் கிலாஃபத் வாக்குறுதி எடுக்கப்பட்ட பிறகு தப்லீகில் இவரது செயல்பாடு அதிகமாகி விட்டது. எப்பொழுதும் தப்லீக் செய்யும் முனைப்போடு இருப்பார்கள். தன்னுடைய பழைய விஞ்ஞானி நண்பர்களிடம் தொடர்பு கொண்டார். இதற்கென்று ஒரு இமெயில் முகவரி உருவாக்கினார்கள். அதன் மூலம் தொடர்பு கொண்டார்கள். பிறகு காதியான் வருவதற்கு அவர்களுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டேயிருந்தார்கள். முதுமை மற்றும் சோர்வு இருந்தும் கூட டெல்லியில் நடைபெற்ற விஞ்ஞானிகளின் மாநாட்டிற்கு அவர்களை தொடர்பு கொள்ள முடியும் என்ற நோக்கத்தோடு தான் கலந்து கொண்டார்கள். பிறகு அவர்களுக்கு ஜமாஅத் பிரசுரங்கள் கொடுக்கப்பட்டது. ஒரு விளக்கவுரையாளர் அவர்களை சந்திக்க வீட்டிற்கு சென்றார். அவரை காதியான் வருவதற்கு அழைப்பு விடுத்தார்கள்.

2008 –ல் ஐக்கிய நாடுகள் சபை சார்பில் International Conference for Astronemy (உலக வானவியல் மாநாடு) கொண்டாடப்பட்ட போது பெங்களூர் சென்று முதுமையிலும் கூட குர்ஆன் மற்றும் விஞ்ஞானம் என்ற தலைப்பில் மிகவும் அறிவிப்பூர்வமான மிக நீண்ட உரையை நிகழ்த்தினார்கள்.

அதற்கு பல விளக்கவுரைகளுடன் தொடர்பு கொண்டார்கள். சூரிய, சந்திரகிரகணத்தை ஒரு தடவை ஆராய்ந்த பிறகு விட்டு விடவில்லை. மாறாக தொடர்ந்து பல புதிய புதிய நுணுக்கங்களை கண்டறிவதில் முயற்சி செய்து கொண்டேயிருந்தார்கள்.

**முரப்பி சாஹிப் எழுதுகிறார்கள்:**

சாலிஹ் முஹம்மது அலாதீன் சாஹிபுக்கு கம்பியூட்டர் உபயோகப்படுத்த தெரியாது. அவர்கள் என்னுடைய உதவியை கோருவார்கள். அஞ்சுமனுடைய அலுவலகப் பணி முடிந்த பிறகு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவரிடம் சென்று புதிய புதிய தலைப்பில் ஆராய்ச்சி செய்வார்கள். நமக்கு இளைஞர்களுடைய ஒரு குழுவை அமைக்க வேண்டும். அது ஒவ்வொரு மாதமும் கிராமங்களுக்கு சென்று புதிய பிறையை தேட வேண்டும். அதை டேட்டா பேஸ் அமைக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் பிறை எப்பொழுது கண்களுக்கு தென்படும் என்பதை எடுத்துக் கூற முடியாது. இந்தப் பதிவேட்டை பத்திரமாக வைத்தால் இதன் மூலமாக பல ஆட்சேபனைகளுக்கு பதில் கிடைக்கும். இது அவர்களுடைய சிந்தனையாகும். அவர்கள் கூறினார்கள். கண்களால் பிறையைப் பார்ப்பது மிகவும் அவசியமாகும். முஸ்லிம்கள் எந்த அளவு கணிதத்தில் முன்னேற்றம் அடைந்தார்களோ அதற்கு காரணம் பிறையை கண்களால் பார்த்ததேயாகும். அல்லாஹ்வும் திருக்குர்ஆனினல் சந்திரனுடைய சுழற்சியை பற்றி கூறுகிறான். சந்திரனை கண்களால் கண்டிப்பாக பார்க்க வேண்டும் என்று கூறுகிறான். அதிகமாக இரவு நேரங்களில் நட்சத்திரங்களை பார்ப்பார்கள். அவர்கள் கூறுவார்கள். பிரான்ஸின் ஒரு மிகப்பெரிய விஞ்ஞானி இருந்தார். அவரும் இதனையே தான் கூறுவார். நட்சத்திரத்திலிருந்து கண்களுக்கு வெளிச்சம் தரக்கூடிய ஒளி மட்டும் வெளிப்படுவதில்லை. மாறாக இதிலிருந்து மூளைக்கு ஒளிதரக்கூடிய ஒளிக் கதிர்களும் வெளிப்படுகிறது.

ஆக, அல்லாஹ்வுடைய கட்டளைக்கேற்ப எப்பொழுதும் வானம் பூமியன் படைப்பைப் பற்றி சிந்திக்க கூடியவராக இருந்தார்கள். உலுல் அல்பாப் ஆக அதாவது அறிவுடையவராக இருந்தார்கள். இவர்களுடைய தாதா அஹ்மதி ஆனார். அதுவும் மிகவும் வித்தியாசமான சம்பவமாகும். அவர் கூறுகிறார். நான் ஒரு தொழில் செய்யக் கூடியவன்; உலகவாதியாக இருந்தேன். மார்க்கத்தல் எந்தவிதமான ஆர்வமும் இல்லாதவனாக இருந்தேன். ஒருமுறை என்னிடம் ரிவியூ ஆஃப் ரிலிஜியன் புத்தகம் வந்தது. அதனுடன் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற புத்தகத்தின் விளம்பரமும் வந்தது. நான் அந்தப் புத்தகத்தை வரவழைத்து படித்தேன். இதனால் எல்லா விதமான இருளும் அகன்றது. அவர்களுடைய தாதா கூறுகிறார்கள்.

அதற்குப் பிறகு என்னிடம் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. நோன்பு வைக்க ஆரம்பித்தேன். நஃபிலான நோன்பையும் வைத்தேன். தொழுகையை முறையாகப் பேணி வந்தேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய ஒரு கனவு கண்டார்கள். அதன் விளக்கம் இவ்வாறு கூறுகிறார்கள். ஏனென்றால் இவர்களுடைய பாட்டனார் சேட் சாஹிப் உடைய தொடர்பு முஃப்தி சாதிக் சாஹிப், யாகூப் அலி இர்பானி சாஹிப் ரோஷன் அலியுடன் இருந்தது.

அவர்கள் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் இவரைப் பற்றி கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் ஒரு கனவு கண்டேன். இவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வார். மிகப் பெரிய அளவில் மார்க்கத் தொண்டு செய்வதற்கான வாய்ப்பினை பெறுவார்கள். ஆக இறையருளால் அவர் பைஅத் செய்தார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவர்களுடைய தாதா பற்றியும் கூறியிருக்கிறார்கள். பழைய நல்ல குடும்பம்; நானும் இவரைப் பற்றி கூறுகிறேன். தொடர்ந்து ஜமாஅத் சேவையில் எல்லாரையும் விடவும் முதன்மையானவராகத் திகழ்ந்தார். இவர்களுடைய பொருளாதார வசதி உயர்வானது கிடையாது என்பதை நான் அறிவேன். ஆனால் மக்கள் இவருடைய உதவி கண்டு வேறு மாதிரி எண்ணுவார்கள். ஆனால் இறைவன் அவருக்கு மிகத்தூய்மையான உள்ளத்தை கொடுத்திருக்கிறான். இவர் ஜமாஅத்தில் இணைவதற்கு முன்பே அல்லாஹ் இவருடைய நல்லியல்பை பற்றி எனக்கு முன்னறிவித்து விட்டான். நான் இவரை இதற்கு முன்பு பார்த்தது கூட கிடையாது. எனவே, எனக்கு இவரது தூய்மை பற்றி குறிப்பாக நல்லெண்ணம் இருக்கிறது. மேலும் ஜமாஅத் சேவையில் எந்த அளவு மூழ்கியிருக்கிறார்கள் என்றால் இவர்களுடைய தியாகங்களைக் கண்டு எனக்கு பொறாமையாக இருக்கிறது. இவர்களை நான் இறை அருளின் ஒரு அருளாக கருதுகிறேன். அந்தோ! இவரைப் போன்று ஜமாஅத்திலுள்ள மற்றவர்களும் குறிப்பாக வியாபாரிகள் யாவரும் இவருடைய முன்மாதிரியின் படி நடந்து தன்னுடைய பண்பில் நல்லியல்பை ஏற்படுத்த வேண்டுமே! இது முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய கூற்றாகும்.

மவ்லவி முஹம்மது இஸ்மாயில் யாத்கீரி கூறுகிறார்கள்: நான் இவர்களுடைய பொருள் தியாகம் எந்த அளவு இருக்கும் என்பதை கணித்து விட்டேன். அந்தக் காலத்தில் அனா புழக்கத்தில் இருந்தன. 16 அனா 1 ரூபாயாக இருந்தது. இப்போதுதான் பைசா புழக்கத்தில் உள்ளது. 100 பைசா 1 ரூபாய் ஆகும். அவர் 16 அனாவில் 2 அனாவை மட்டும் தனக்கு வைத்துக் கொண்டு 14 அனாக்களை ஜமாஅத்திற்கு தியாகம் செய்து விடுவார். மிகப்பெரிய வியாபாரியாக இருந்தும் கூட இவ்வாறு செய்வார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவருடைய பாட்டனாரின் தப்லீக் உணர்வைக் கண்டு இவருடைய உணர்வு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தல் வாழ்ந்த மவ்லவி புர்கானுத்தீன் சாஹிபைப் போன்றும், பொருள் தியாகத்தில் சேட் அப்துர் ரஹ்மான் சாஹிப் (ரலி) அவர்களைப் போன்றும் இருக்கிறது என்று கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் சேட் அப்துர் ரஹ்மான் சாஹிப், அல்லாரக்கா ஆகிய சஹாபிகள் மூலம் அல்லாஹ் மலக்குகளை அனுப்பினான். என்னுடைய காலத்தில் உங்களுடைய உருவத்தில் மலக்குகளை அனுப்பியிருக்கிறான்.

இது இவர்களைப் பற்றியும், இவர்களுடைய குடும்பத்தைப் பற்றியும் உள்ள அறிமுகமாகும். இவருடைய தன்னடக்கம் மற்றும் எளிமையைப் பற்றி இவருடைய மகன் ஒரு சம்பவத்தை எழுதுகிறார்.

ஒருமுறை சிவப்பு சட்டை அணிந்தவாறு டெல்லி ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்தார். சாமான்களைத் தூக்கி செல்லக்கூடிய கூலிகளும் சிவப்புநிற சட்டையையே அணிந்திருப்பார்கள். ஒரு குடும்பம் வந்தது. இவரை கூலி என்று எண்ணி சாமான்களை எடுத்து அங்கே வைக்கும்படி கூறினார்கள். அவர்கள் எதுவும் கூறாமல் சாமான்களை அங்கிருந்து எடுத்துச் சென்றார்கள். (நான் தற்போது ஸாலிஹ் முஹம்மது அலாதீன் பற்றி கூறுகிறேன்.) பிறகு சுமை கூலி கொடுப்பதற்காக பணம் எவ்வளவு வேண்டுமென்று அந்த குடும்ப நபர் கேட்ட போது நீங்கள் சாமான்களை இந்த இடத்தில் சேர்க்கும்படி கூறினீர்கள். நான் சேர்த்து விட்டேன். பணம் எதுவும் தேவையில்லை என்று கூறினார்கள். இதனைக் கேட்டதும் அவர்கள் வெட்கத்தால்

தலை குனிந்தார்கள். மிகவும் தன்னடக்க மனப்பான்மை கொண்டவராக இருந்தார்கள். இங்கு 2003 ஜல்ஸாவிற்கு வந்தார்கள். அப்போது உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. போக்குவரத்து ஏற்பாடும் சரியாக இல்லை. வெகுநேரம் காத்திருக்க வேண்டியதிருந்தது. பிறகு தங்குமிடம் ஏற்பாடும் கொஞ்சம் சரியில்லாமல் இருந்தது. அவ்வாறிருந்தும் எந்தவிதமான குற்றம் குறை கூறாமல் ஜமாஅத் அமைப்பின் கீழ் அந்த நாட்களைக் கழித்தார்கள். அல்லாஹ் இவர்கள் மீது அருள் புரிவானாக. இவர்களுடைய பிள்ளைகளை நன்மைகளில் நிலைபெறச் செய்வானாக. இவருடைய மனைவி இவருக்கு முன்பே மரணமடைந்து விட்டார்கள். இவருடைய ஜனாஸா தொழுகைக்குப் பிறகு நடக்கும்.

மற்றொரு ஜனாஸா கன்னூர் முஹம்மது ஷயீது சாஹிப் உடையது. இவர்கள் தற்பொழுது கனடாவில் வசிக்கிறார்கள். கனடாவிலிருந்து பாகிஸ்தான் செல்லும் போது விமானத்திலேயே மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். கனடாவில் வான்கூவரில் கேல்கரியில் தற்காலிக முரப்பியாக இருந்தார். இதனை தவிர கனடாவில் கஸா போர்டிலும் மற்றும் வஸிய்யத் செயலாளராகவும் சேவை செய்து வந்தார்கள். அஹ்மதிய்யா கஸட், வக்ஃபே நவ் -ல் ஒருங்கிணைப்பாளர் சேவை செய்துள்ளார்கள். கியூபக்கில் குர்ஆனுடைய பிரெஞ்சு மற்றும் குருமுக்கி மொழியில் மொழியாக்கம் செய்து அதை கொடுக்கும் பணியை செய்தார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடைய பைத்துல் ஹம்து திட்டம் பற்றிய அறிவிப்பு செய்த போது 1 லட்சம் ரூபாய் தருவதாக விருப்பம் தெரிவித்திருந்தார். அங்கு அவர்களால் கொடுக்க முடியவில்லை. பிறகு கனடா சென்று விட்டார்கள். அங்கு பைத்துஸ்ஸலாம் பள்ளிவாசல் பணிக்காக 1 லட்சம் டாலர் அர்ப்பணித்துள்ளார்கள். குர்ஆனின் இரண்டு மொழியில் அச்சிடுவதற்கு மிகப்பெரிய தொகை வழங்குவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அல்லாஹ் இவருடைய தர்ஜாவை உயர்த்துவானாக. பிள்ளைகளை பாதுகாக்கக் கூடியவனாக ஆகட்டுமாக. அவர்களுக்கு உதவி புரிவானாக. இந்த இரண்டு பேருடைய ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 25.03.2011**

Translated by : **Maulvi ZIYAUL HAQ Sb.**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**